**S.C 323/2017**

P.W.4 **திருமதி.விக்டோரியா** **18.12 .2019**

**எதிரிகள் தரப்பில் 311 சி.ஆர்.பி.சி யின் கீழ் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் மசா.4ன் கு. விசாரணை:**

நான் மதுரைக்கு வருவதற்கு முன்பு கேரளாவில் குடியிருந்து வந்தேன். சம்பவம் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்ப கேரளாவிலிருந்து மதுரைக்கு குடிபெயர்ந்தேன். கடைக்கு பக்கத்தில் யார் யார் வீடு உள்ளது யார் குடியிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1வது எதிரிக்கும் எனக்கும் நேரடியாக எந்த சம்பந்தமும் கிடையாது எந்தவித தொடர்பும் கிடையாது. 2வது எதிரிக்கும் எனக்கும் நேரடியாக எந்த சம்பந்தமும் கிடையாது எந்தவித தொடர்பும் கிடையாது. 1,2 எதிரிகளை சம்பவத்தன்று பார்த்த பிறகு தற்போது நீதிமன்றத்தில் பார்க்கின்றேன். போலிசார் என்னை எதிரிகளை அடையாள காட்டி அடையாள அணிவகுப்பு எதுவும் நடக்கவில்லை. என் வீடு இருப்பது ஆனையூர் தமிழ்நகர் என்றால் சரிதான். ஆனையூர் தமிழ்நகர் ஆனையூர் மெயின்ரோட்டின் வாய்க்காலுக்கு கிழக்குபுறம் செல்லும் ரோட்டில் உள்ளது. என் வீட்டிலிருந்து வாய்க்காலுக்கு மேற்கில் உள்ள ரோடு சீலைனேரி ரோடு என்றால் சரிதான். சீலைனேரி ரோட்டில் தான் கூடல்புதூர் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சீலைனேரி ரோட்டிலிருந்து மேற்கே 500 மீ தள்ளிதான் சந்தை ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி சந்தை ரோடு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அரை கி.மீ செல்கிறது என்றால் சரிதான். அந்த அரை கி.மீ தள்ளிதான் சம்பவ இடம் இருக்கிறது என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது என் வீட்டிற்கு அருகே பெட்டி கடை வைத்து வியாபாரம் செய்து வருகின்றேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். எங்கள் கடைக்கு வரும் கலர்பாட்டிலில் எங்கள் கடைக்கு வந்த தேதி போட்டுதான் வரும் என்றால் சரிதான். அந்த கலர் பாட்டிலில் காலாவதி தேதி குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். கலர் பாட்டில் எதையும் காட்டி போலிசார் என்னை அடையாளம் காட்ட சொல்லவில்லை. நீதித்துறை நடுவர் என்னை விசாரித்த போது நான் வீட்டிற்கு சென்றுவிட்டு ஆறு மணியளவில் கடையை திறக்கும் போது போலிசார் கூட்டமாக சம்பவ வீட்டில் நின்றார்கள் என்றும் பொதுமக்களும் நின்றார்கள் என்று சொல்லியுள்ளேன். அந்த சமயமே பொது மக்கள் அங்கு ராஜேஸ் யாரோ மணி என்பவரை கொலை செய்து விட்டதாக சொன்னார்கள் என்று சொல்லியுள்ளேன். எங்கள் கடை சிறிய பெட்டி கடை தரையில் தாழ்வாரத்தில் நான் உட்கார்ந்திருப்பேன். எங்கள் கடையில் கலர் பாட்டில்கள் பெட்டிக்கடைக்கு எதிர்த்தாற்போல் ஒரு மேடை அமைத்து அதில் வரிசையாக அடுக்கியிருந்தேன். நான் கடையில் உட்கார்ந்து பார்த்தால் மேடைக்கு பின்னால் நிற்பவர்கள் தெரியும்

என்றால் சரிதான். ஆனால் கடையில் படுத்திருந்தால் மேடைக்கு பின்னால் நிற்பவர்கள் தெரியுமா என்றால் தெரியாது. நீதித்துறை நடுவர் விசாரணையில் நான் கடையில் சம்பவ சமயத்தன்று படுத்திருந்தேன் என்று சொல்லியுள்ளேன். ரோட்டை ஆக்கிரமித்து கடை வைத்திருந்தால் போலிசார் உதவி தேவைப்படும் என்றால் சரிதான். போலிசார் வேண்டிக்கொண்டதன்பேரில்தான் நான் நீதித்துறை நடுவரிடம் சாட்சியமளித்தேன். நீதித்துறை நடுவர் விசாரணையில் நான் ஒரு பெண் ஒரு 3 வயது பெண் குழந்தையுடன் எனது கடைக்கு வந்து பிஸ்கட் பாக்கெட் வாங்கி சென்றார் என்றும் மேற்படி பெண்ணின் பெயர் லாவண்யா என்ற பேப்பரில் பார்த்து தெரிந்துகொண்டேன் என்று சொல்லியுள்ளேன். போலிசார் அந்த 3 வயது பெண்குழந்தையை என்னை அடையாளம் காட்ட சொல்லவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் 1வது எதிரி என் கடைக்கு வந்து எந்த பொருளும் வாங்கவில்லை என்றும் சம்பவ இடத்தின் அருகில் என் கடை இல்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்த வழக்கில் ஒரு சாட்சியம் வேண்டும் என்பதற்காக என்னை போட்டு நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.